## வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு– 2017

---

வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற கம்பனியின் செயலாற்றல் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இது தொடர்பான விபரமான அறிக்கையொன்று 2018 யூன் 08 இல் கம்பனியின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் 32 ஆம் பந்தியின் பிரகாரம், நிறுவனமானது ஏதேனும் நியமத்தால் வேண்டப்பட்டால் அல்லது அனுமதிக்கப்பட்டால் தவிர சொத்துக்களையும் பொறுப்புக்களையும் அல்லது வருமானங்களையும் செலவினங்களையும் ஒன்றுக்கொன்று ஈடுசெய்ய முடியாத போதிலும் மீளாய்வாண்டின் போது ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தை அகற்றுவதிலிருந்து பெறப்பட்ட ரூபா 3,608,251 இலாபம் அதன் ரூபா 129,042 நட்டத்திற்கெதிராக ஈடுசெய்யப்பட்டு ரூபா 3,479,209 தேறியலாபம் கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. மேலும், வசந்தம் ரீவீ அலைவரிசையின் ரூபா 86,900,996 வியாபாரக் கடன்பட்டோர் மீதி ரூபா 10,785,379 கடன்கொடுத்தோர் மீதிக்கு எதிராக ஈடுசெய்யப்பட்டு ரூபா 76,115,617 தேறிய மீதி கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 02 இன் 09 ஆம் பந்தியின் பிரகாரம், பொருளிருப்புக்களானது தேறிய கைக்கிட்டிய பெறுமதி அல்லது கிரயத்தில் மதிப்பிடப்பட்டு அதில் எது குறைந்ததோ அது கணக்குகளிற்கு கொண்டுவரப்பட வேண்டிய போதிலும் கம்பனியானது பொருளிருப்புக்கள் மற்றும் ஏனைய இருப்புக்களில் உள்ளடங்கியுள்ள உதிரிப் பாகங்களை தேறிய கைக்கிட்டிய பெறுமதியில் மதிப்பீடு செய்யாமல் ரூபா 16,671,347 கிரயத்தில் கணக்கீடு செய்திருந்தது.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 12 இன் 79, 80 மற்றும் 81 ஆம் பந்திகளின் பிரகாரம், கம்பனியானது வரிகள் தொடர்பான விபரங்கள் மீதான ஆகக் குறைந்த தேவைப்பாடுகளை நிதிக்கூற்றுக்களில் குறிப்பு மூலம் வெளிப்படுத்த வேண்டிய போதிலும் நிதிக்கூற்றுக்களின் 12 ஆம் குறிப்பில் காட்டப்பட்ட வரிக் குறிப்பில் அத்தகைய விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம், நடைமுறையல்லாச் சொத்துக்களிற்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக ரூபா 1,212,616,242 கிரயமான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட போதிலும் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம், மதிப்பிடப்பட்ட தவறை இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் சீராக்கம் செய்து நியாயமான பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக பெறப்பட்ட அரசாங்க மானியங்களை கணக்கீடு செய்வதற்காக கம்பனியால் இனங்காணப்பட்டிருந்த கொள்கையின் பிரகாரம் 2008 ஆம் ஆண்டில் ஐரீஎன் அலைவரிசைக்காக பெறப்பட்ட ரூபா 31,221,094 தொகை 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காலக்கழிவாக வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேலும் ரூபா 9,889,242 மீதியொன்று எஞ்சியிருந்தது.

(ஊ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 55 ஆம் பந்தியின் பிரகாரம், சொத்து ஒன்று பயன்பாட்டிற்கு கிடைக்கக்கூடியதாக உள்ள போது சொத்து பெறுமானத்தேய்வு ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு இணங்காதவாறு 2017 திசெம்பர் 31 இல் நடைமுறை வேலைக் கணக்கிலிருந்து கட்டிடக் கணக்கிற்கு மாற்றப்பட்ட ரூபா 325,240,826 பெறுமதியான ஸ்ரூடியோ தொகுதிக்குரிய ரூபா 1,355,170 தொகை மீளாய்வாண்டின் போது பெறுமானத்தேய்வாக கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

(எ) 2016 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 4,847,768 தொகையான மோட்டார் வாகன பெறுமானத்தேய்வு மீளாய்வாண்டிற்கு சீராக்கம் செய்யப்பட்டதனால் மீளாய்வாண்டின் நட்டம் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இருப்பு மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 16,707,119 பெறுமதியான இருப்புக்களில் 2017 ஆம் ஆண்டிற்கு முன்னரான ஆண்டுகளிற்குரிய முகாமைத்துவ நாட்குறிப்பேடுகள், வருடாந்த அறிக்கைகள், வாழ்து மடல்கள் போன்ற பயன்படுத்தப்பட முடியாத ரூபா 967,087 பெறுமதியான இருப்புக்கள் உள்ளடங்கியிருந்தன.

(ஐ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வியாபாரக் கடன்பட்டோர், மதிப்பிழந்த காசோலைகளிற்குரிய கடன்பட்டோர் மற்றும் ஏனைய கடன்பட்டோர் என்பவற்றிற்கான நட்டக்கழிவுச் சீராக்கல் பெறுமதி ரூபா 214,434,350 தொகையானதுடன் அவற்றின் மீதான பிற்போடப்பட்ட வரி சொத்து ரூபா 60,041,618 ஆக காணப்பட வேண்டிய போதிலும் கம்பனியால் பிற்போடப்பட்ட வரி கணிப்பீட்டின் போது அப் பெறுமதி ரூபா 44,141,189 ஆக கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதே போல் ஊழியர் கடன்களிற்குரிய நட்டக்கழிவுப் பெறுமதி ரூபா 128,125 தொகையானதுடன் அதன் மீதான பிற்போடப்பட்ட வரி சொத்து ரூபா 35,882 ஆக காணப்பட வேண்டிய போதிலும் கம்பனியானது ரூபா 375,556 ஆக பிற்பேடப்பட்ட வரி சொத்தை கருத்தில் கொண்டு வரியை கணிப்பீடு செய்திருந்தது. அதற்கிணங்க கம்பனியின் பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு ரூபா 179,966,317 தொகையானதுடன் சரியான பிற்போடப்பட்ட வரிச் சொத்து ரூபா 88,277,381 ஆக இருக்க வேண்டும். ஆகையால் தேறிய பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு ரூபா 91,688,936 ஆக இருக்க வேண்டிய போதிலும் இப் பெறுமதி ரூபா 107,249,693 ஆக கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்ததால் பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பானது ரூபா 15,560,757 ஆல் கணக்கில் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஒ) 2017 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டு தொடர்பாக கம்பனியால் செலுத்தப்பட வேண்டிய ரூபா 1,971,596 தெகையான பொருளாதார சேவைக் கட்டணங்கள் கணக்கிற்கு செலுத்த வேண்டியவைகளாக கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஓ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டியவையாக கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 301,048 மின்சார செலவினங்கள் மீளாய்வாண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அத் தொகை மின்சாரச் செலவினக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் நட்டம் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஔ) கம்பனியின் புதிய அலுவலகத் தொகுதியின் மின்தூக்கியை நிறுவுவதற்கான கட்டணங்களாக ரூபா 940,000 தொகை 2017 நவம்பர் 07 இல் உரிய கம்பனிக்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அத் தொகை 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அட்டுறு செலவினமொன்றாக மீண்டும் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

(க) 2015 ஆம் ஆண்டின் போது கம்பனியால் உழைக்கப்பட்ட இலாபத்தை அடிப்படையாகக்கொண்டு பங்கிலாபங்களாக திறைசேரிக்கு செலுத்த வேண்டிய ரூபா 11,651,061 தொகைக்காக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(கா) 2016 திசெம்பர் 30 இலிருந்து 5.75 சதவீத வருடாந்த வட்டி வீதத்தில் அரச வங்கியொன்றில் பேணப்பட்ட ரூபா 5,000,000 தொகையான கால வைப்பின் வட்டியானது கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(கி) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 16,294,701 மதிப்பிழந்த காசோலைகளிற்கான நட்டக்கழிவுச் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அவற்றில் உள்ளடக்கப்பட்ட ரூபா 1,866,665 பெறுமதியான இரண்டு காசோலைகளுக்குரிய கடன்பட்டோர் 2017 ஆம் ஆண்டின் போது தவணைக் கட்டணங்களாக கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு ஆரம்பித்திருந்தனர். எவ்வாறாயினும் அப் பெறுமதி நட்டக்கழிவுச் சீராக்கங்களிலிருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை.

(கீ) கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற இருப்பு மெய்மையாய்வு அறிக்கைகளின் பிரகாரம் இருப்பு மீதியின் பெறுமதி ரூபா 16,707,119 தொகையானதுடன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இது ரூபா 16,671,347 ஆக காணப்பட்டதனால் ரூபா 35,772 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(கு) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி ரூபா 25,446,073 தொகையானதுடன் வரிப் பதிவேடுகளின் பிரகாரம் இது ரூபா 20,694,067 ஆக காணப்பட்டதனால் அவ் இரண்டு அறிக்கைகளிற்கும் இடையே ரூபா 4,752,006 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(கூ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான தேசத்தை கட்டியெழுப்பும் வரி மீதான செலவினம் ரூபா 28,975,025 தொகையானதுடன் வரிப் பதிவேடுகளின் பிரகாரம் இது ரூபா 28,784,687 ஆக காணப்பட்டதனால் அவ் இரண்டு அறிக்கைகளிற்கும் இடையே ரூபா 190,338 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(கெ) பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது காசாக பெறப்பட்ட வட்டி வருமானம் ரூபா 147,893,580 தொகையான போதிலும் இது நிதிக் கூற்றுக்களில் நிதி நடவடிக்கைகளின் கீழ் ரூபா 164,021,890 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது.

(கே) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களிற்கும் நிலையான சொத்துப் பதிவேட்டிற்கும் இடையே தளபாடம் மற்றும் பொருத்துக்கள் தொடர்பாக ரூபா 622,247 வேறுபாடொன்றும் அலுவலக உபகரணம், பரிமாற்றல் உபகரணம் மற்றும் பொறி மற்றும் இயந்திரம் தொடர்பாக ரூபா 51,655,399 வேறுபாடொன்றும் அவதானிக்கப்பட்டது.

(கை) வருடாந்த பொருள் மெய்மையாய்வின் போது மெதுவாக அசையும் இருப்புக்களின் மீதி ரூபா 6,430,112 ஆக இனங்காணப்பட்டிருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் இது ரூபா 7,130,390 ஆக குறிப்பிடப்பட்டிருந்ததனால் ரூபா 700,278 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.4 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு இருக்கின்றன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது:

- இவ் அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிற்கு உட்பட்டு கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான்

பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் ஆகும்.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

---

**2.3.1 பெறவேண்டிய தொகைகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003, 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளின் போது கம்பனியால் மேற்கொள்ளப்பட்ட மீள் வியாபார கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான ரூபா 14,641,728 பெறுமதியான சேவைகள் கால ரீதியாக பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காததன் காரணமாக அவ் முழுப் பெறுமதிக்காக நட்டக்கழிவுச் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) கம்பனியின் சேவைநாடுநர் கடன் கொள்கையின் பிரகாரம் கடன் காலப்பகுதி 03 மாதங்களாக காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 854,178,740 சேவைநாடும் கடன்பட்டோரில் 03 மற்றும் 06 மாதங்களுக்கு இடைப்பட்ட கடன்பட்டோர் மீதியாக ரூபா 155,728,021 தொகையும், 06 மாதங்களுக்கு மேற்பட்ட ஆனால் 01 வருடத்திற்கு குறைவான கடன்பட்டோர் மீதியாக ரூபா 149,939,388 தொகையும், ஒரு வருடத்திற்கு மேற்பட்ட கடன்பட்டோர் மீதியாக ரூபா 178,239,352 தொகையும் காணப்பட்டது. இவ் மொத்தக் கடன்பட்டோர் மீதியில் ரூபா 191,823,614 இற்காக நட்டக்கழிவுச் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(இ) கம்பனியால் 2010 ஆம் ஆண்டின் போது வெகுசன ஊடக அமைச்சிற்கு வழங்கப்பட்ட 03 தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் அவற்றின் நிறுவுதல் கட்டணங்களிற்காக பெற வேண்டிய ரூபா 329,973 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2009 ஆம் ஆண்டின் போது கம்பனியின் நான்கு உத்தியோகத்தர்களிற்காக செலுத்தப்பட்ட ரூபா 35,942 தனிப்பட்ட தொலைபேசி விலைப்பட்டியல் கட்டணங்கள் மீளாய்வாண்டு வரையிலும் மீள்நிரப்பப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முற்பணங்களாக தனியார் தனியார் வழங்குநர்களிற்கு ரூபா 9,641,947 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 வரையிலும் உரிய வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் முற்பணத் தொகையும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) ஜரீஎன் எவ்எம் அலைவரிசை வியாபாரக் கடன்பட்டோர் மீதிகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஆம் ஆண்டின் போது மத்தல விமான நிலையம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விளம்பர நடவடிக்கை தொடர்பாக எயாபோட் அன்ட் ஏவியேஷன் சேவிசஸ் ஸ்ரீலங்கா லிமிட்டட் நிறுவனத்திடமிருந்து ரூபா 106,479 தொகை பெறவேண்டியிருந்த போதிலும் அந் நிறுவனத்தால் கொடுப்பனவு நிராகரிக்கப்பட்டிருந்தது.

(ii) Bench Mark Strategic மற்றும் சூரிய வாஹினி சூரிய சக்தி (solar power) என அழைக்கப்பட்ட இரண்டு சேவைநாடும் கடன்பட்டோர் நிறுவனங்கள்

தற்போது பூட்டப்பட்டிருந்ததால் அந் நிறுவனங்கள் இரண்டிலுமிருந்து அறவிடப்பட வேண்டிய முறையே ரூபா 316,250 மற்றும் ரூபா 241,500 தொகைகள் அறவிடப்பட முடியாதிருந்தன.

(iii) அபிவிருத்தி லொத்தர் சபையிடமிருந்து 2014 ஆம் ஆண்டிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 682,869 கொடுப்பனவு லொத்தர் சபையின் புதிய ஆளுநர் சபையால் நிராகரிக்கப்பட்டிருந்தது.

(iv) பஸ்யால தனியார் குஷன் வேலைத்தளத்துடன் ஏற்படுத்தப்பட்ட எழுத்து மூலமான உடன்படிக்கை காணப்படாததன் காரணமாக அந் நிறுவனத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 353,993 தொகை அறவிடப்பட முடியாதிருந்தது.

(v) அரச கூட்டுத்தாபனமொன்றிலிருந்து 2010 ஆம் ஆண்டிலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 288,400 தொகையை அறவிடுவதற்காக அக் கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பிப்பதற்காக எழுத்து மூலமான உடன்படிக்கையொன்றோ அல்லது வேறு முறையான ஆவணமோ காணப்படாததன் காரணமாக மேற்படி தொகையை செலுத்த முடியாதிருந்ததெனவும் முறையான ஆவணமொன்றை சமர்ப்பித்தால் அத் தொகையை தீர்ப்பனவு செய்ய முடியுமெனவும் அக் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளரால் குறிப்பிடப்பட்டிருந்தது.

(vi) விழாவொன்றை நடாத்துவது தொடர்பான மேம்படுத்தல் நடவடிக்கைக்காக அரசாங்க பாடசாலையொன்றிலிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 339,660 கொடுப்பனவு அவ் விழாவிலிருந்து நட்டம் ஏற்பட்டதனால் அப் பாடசாலையினால் நிராகரிக்கப்பட்டிருந்தது.

**2.3.2 செலுத்த வேண்டிய தொகை**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,262,981 தொகையான செலுத்த வேண்டிய வைப்புப் பெறுமதியினுள் 2015 திசெம்பர் 31 வரை வைப்புச் செய்யப்பட்ட ரூபா 522,025 பெறுமதி உள்ளடங்கியிருந்தது. உரிய வைப்பாளர்களை இனங்கண்டு அத் தொகையை மீளச் செலுத்துவதற்கோ அல்லது அவ் வைப்புக்களை வருமானத்திற்கு செலவு வைப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 திசெம்பர் 31 வரை வாடிக்கையாளர்களிற்கு வழங்கப்பட்ட போதிலும் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிராத 774 காசோலைகளின் பெறுமதி ரூபா 5,833,109 தொகையானதுடன் அத் தொகை இரத்துச் செய்யப்பட்ட காசோலைக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

(இ) நிதிக் கூற்றுக்களில் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளின் கீழ் காணப்பட்ட ரூபா 1,351,789 தொகையான உரிமை கோரப்படாத கொடுப்பனவு மீதிகளில் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட ரூபா 974,651 உரிமை கோரப்படாத மீதி உள்ளடங்கியிருந்தது. எவ்வாறாயினும் உரிமைக் கோரிக்கைகளை உறுதிப்படுத்திய பின்னர் இத் தொகையை மீளச் செலுத்துவதற்கோ அல்லது அதனை வருமானத்திற்கு செலவு வைப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு ரூபா 35,149,670 செலுத்த வேண்டிய மீதியினுள் ரூபா 316,395 இனங்காணப்படாத கடன்கொடுத்தோர் மீதி உள்ளடங்கியிருந்தது. அம் மீதியை இனங்கண்டு தீர்ப்பனவு செய்வதற்கோ

அல்லது அதனை வருமானத்திற்கு செலவு வைப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் - நிதிப்பிரமாணம் 396 | 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 திசெம்பர் 31 வரை இரத்துச் செய்யப்பட்ட காசோலைகளின் பெறுமதி ரூபா 4,957,006 தொகையானதுடன் இது தொடர்பாக நிதிப்பிரமாண ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) பொது முயற்சிகள் சுற்றறிக்கை** | |
| (i) 2015 மே 25 ஆம் திகதிய பிஈடி 01/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை | • சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் கம்பனியின் பதிற்கடமை தலைவரிற்காக 2040 லீற்றர் எரிபொருள் அளவு மாத்திரமே அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 3,994 லீற்றர் எரிபொருள் வழங்கப்பட்டதன் காரணமாக அங்கிகரிக்கப்பட்ட எல்லையை விஞ்சி 1,954 லீற்றர் எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது.<br>• சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் போக்குவரத்து மற்றும் எரிபொருள் படிகளிற்கு உரித்தற்ற 338 உத்தியோகத்தர்களிற்கு போக்குவரத்து மற்றும் எரிபொருள் படிகளாக மீளாய்வாண்டின் போது ரூபா 26,421,410 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) 2017 திசெம்பர் 11 ஆம் திகதிய பிஈடி/03/2017 ஆம் இலக்க சுற்றறிக்கை | (i) சுற்றறிக்கை ஏற்பாடுகளின் மூலம் ''உரிய நிதியாண்டில் நட்டம் ஏற்பட்டுள்ள நிலைமையை அறிக்கையிட்டு கருணை அடிப்படையில் கடைசி நிதியாண்டுடன் ஒப்பிட்டு நட்டத்தை குறைப்பதற்கு தவறியிருந்த அரசாங்கத்திற்கு சொந்தமான கம்பனிகளிலுள்ள ஒவ்வொரு ஊழியர்களிற்கும் மிகையூதியமாக ரூபா 3,000 தொகை மாத்திரமே செலுத்தப்பட முடியும்'' என்பது முக்கியத்துவப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக 2017 ஆம் ஆண்டின் போது திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் மீளாய்வாண்டின் போது தொலைக்காட்சி வலையமைப்பு ஊழியர் ஒருவரிற்கு ரூபா 38,000 படி மிகையூதியமாக ரூபா 25,878,379 கூட்டுமொத்தத் தொகையை கம்பனி செலுத்தியிருந்தது. மேற்படி மிகையூதியத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்பு படி, செயலாற்றல் படி மற்றும் பதவியணியினர் நலன்புரி படிகளாக ஊழியர்களிற்கு ரூபா 72,721,144 கூட்டுமொத்தத் |

| | | |
|---|---|---|
| | | தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| | | (ii) சுற்றறிக்கையின் 3.3 ஆம் பந்தியில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் மிகையூதியக் கொடுப்பனவை மேற்கொள்வதற்காக கம்பனியின் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் 2003 யூன் 2 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையுடன் வழங்கப்பட்ட நல்லாளுகைக்கான பொது முயற்சி வழிகாட்டல்களின் 6.5 ஆம் ஏற்பாட்டின் பிரகாரம் உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளிற்கான நிதிக்கூற்றுக்கள் முறையே 2017 ஏப்ரல் 08 மற்றும் 2018 ஏப்ரல் 04 இலேயே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. |
| (இ) | 2015 யூலை 10 ஆம் திகதிய 02/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 10 ஆம் பந்தி | அரசாங்க நிறுவனங்களிலுள்ள பழுதடைந்த வாகனங்களை அகற்றுவதிலிருந்து பெறப்பட்ட அனைத்துப் பெறுகைகளும் திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் 04 வாகனங்களின் அகற்றலிலிருந்து பெறப்பட்ட ரூபா 3,587,706 கூட்டுமொத்த தொகையை கம்பனி திரட்டிய நிதியத்திற்கு செலவு வைத்திருக்கவில்லை. அதே போல் அகற்றல் செயன்முறை பூர்த்தியடைந்ததும் மாதிரி இல. 02 இன் பிரகாரம் விபரமான அறிக்கையொன்று அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகம், திறைசேரி செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம், தேசிய வரவுசெலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகம் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஆகியோரிற்கான பிரதிகளுடன் பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அத்தகைய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.5 போதியளவு அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

நிதிப்பிரமாணம் 380(2) இன் பிரகாரம் திறைசேரி பிரதிச் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது வங்கியில் உத்தியோகபூர்வ கணக்கை ஆரம்பிப்பதற்கான அதிகாரத்தை திணைக்களத் தலைவர்கள் கொண்டுள்ளார்கள். அதற்கிணங்க கம்பனியின் 04 அலைவரிசைகள் தொடர்பாக 22 வங்கிக் கணக்குகள் பேணப்படுகின்றதுடன் 04 இற்கு மேற்பட்ட மேற்படி வங்கிக் கணக்குகளை பேணுவதற்காக திறைசேரிப் பிரதிச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் வரிக்குப் பின்னரான நட்டம் ரூபா 295,924,136 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வரிக்குப் பின்னரான நட்டம் ரூபா 107,189,266 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 188,734,870 ஆன அதாவது 176 சதவீதமான வீழ்ச்சியொன்றைச் சுட்டிக்காட்டுகின்றது.

மீளாய்வாண்டின் போது ஒலிபரப்பு நேர விற்பனை வருமானம் ரூபா 371,639,775 ஆல் அதாவது 21 சதவீதத்தால் குறைவடைந்தமை மேற்படி வீழ்ச்சிக்கான பிரதான காரணமாக இருந்தது.

ஐரீஎன் அலைவரிசை 2016 ஆம் ஆண்டின் போது அது ரூபா 8,618,025 நட்டம் அடைந்திருந்ததுடன் 2017 ஆம் ஆண்டின் போது அது ரூபா 252,363,996 நட்டம் வரை ரூபா 243,745,971 ஆல் அதாவது 2,828 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. வசந்தம் ரீவி, வசந்தம் எவ்எம் மற்றும் ஐரீஎன் எவ்எம் அலைவரிசைகள் 2016 மற்றும் 2017 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் நட்டம் அடைந்திருந்த போதிலும் அந் நட்டங்கள் முறையே ரூபா 19,230,801, ரூபா 7,120,642 மற்றும் ரூபா 26,083,691 ஆல் குறைவடைந்திருந்தன.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் இலாபத்தன்மை விகிதங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **விகிதம்** | **2017** | **2016** |
|---|---|---|
| மொத்த இலாப விகிதம் (சதவீதம்) | 65 | 77 |
| தேறிய இலாப/(நட்ட) விகிதம் (சதவீதம்) | (4) | 18 |

மேலே சுட்டிக்காட்டப்பட்டவாறு விகிதங்களின் வீழ்ச்சி எதிர்காலத்தில் கம்பனியின் தொடர்ந்தியங்கும் எணணக்கரு மற்றும் திரவத்தன்மை மீது பாதகமாக தாக்கம் செலுத்தக்கூடும் என அவதானிக்கப்பட்டது.

### 3.3 கம்பனிக்கு எதிராக அல்லது கம்பனியால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான விடயங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் செய்தி ஒளிபரப்பின் போது இடம்பெற்ற அவமானப்படுத்தல்களிற்காக வெளித்தரப்பினர்களால் 04 வழக்குகள் கம்பனிக்கெதிராக தொடரப்பட்டிருந்ததுடன் அதற்காக கோரப்பட்டிருந்த நட்டஈட்டுத் தொகை ரூபா 2,555,000,000 ஆகும். கம்பனியால் உரிமையாளாகளின் திரைப்படங்களை அங்கீகாரமின்றி ஒளிபரப்பியமைக்காக வெளித்தரப்பினரால் 04 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. மேலும் இடைநிறுத்தப்பட்ட மூன்று ஊழியர்களினாலும் கட்டாய ஓய்வு அடிப்படையின் கீழ் ஓய்வுபெற்றுச் சென்ற இரண்டு ஊழியர்களினாலும் 05 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. இவ் வழக்குகளிற்காக சட்டத்தரணிகளின் கட்டணங்களாக ரூபா 1,014,800 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் கம்பனியால் வழங்கப்பட்டிருந்த ஒலிபரப்பு நேரத்திற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 16,950,386 தொகையினை அறவிடுவதற்காக கடன்பட்டோரிற்கு எதிராக 10 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 3,474,077 அறவிடப்பட வேண்டிய மூன்று கடன்பட்டோர்களின் நிரந்தர வசிப்பிடங்களை கண்டறிய முடியாததாலும் ரூபா 2,702,500 அறவிடப்பட வேண்டிய கடன்பட்டோரொருவர் காணாமல் போனதாலும் அந்த வழக்குகளை தொடர்ந்தும் முன்கொண்டு செல்ல முடியாது போயிருந்தது. 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு வருடத்திற்கு மேற்பட்ட கடன்பட்டோர் மீதி ரூபா 178,239,352 ஆக காணப்பட்ட போதிலும் தொகையை அறவிடுவதற்காக வழக்குகள் தொடரப்பட்டிருந்தமை ரூபா 16,950,380 இற்கு மாத்திரமேயாகும்.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் 2014 தொடக்கம் 2018 வரையான காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் இது 2017 ஆம் ஆண்டிற்காக மீளாய்வு செய்யப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டத்தை தயாரிக்கும் போது உள்ளடக்கப்பட வேண்டுமென தேவைப்படுத்தப்பட்ட குறித்த சில பொருண்மையான விடயங்கள் முக்கியத்துவப்படுத்தப்பட்டிருந்த போதிலும் 2014 தொடக்கம் 2018 வரையான காலப்பகுதிக்காக கம்பனியால் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டமானது கம்பனியால் உரிமையாக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பான விபரங்கள், கம்பனியின் அமைப்பு கட்டமைப்பு, முன்னைய மூன்று ஆண்டுகளின் செயற்பாட்டு விளைவுகள் மீதான மீளாய்வு போன்றவற்றை உள்ளடக்கியிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தால் பாரியளவிலான நிர்மாணங்களிற்காக வழங்கப்பட்ட ஐசீரீஏடி/எஸ்பீடி/02 ஆம் இலக்க நியம கேள்வி ஆவணங்களின் 14.8 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுத்தி வைத்தல் பணத்தின் 50 சதவீதம் நிர்மாணம் கையளிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட முடியும். எவ்வாறாயினும், அதற்கு முரணாக நிறுத்தி வைத்தல் கால எல்லை முடிவடைவதற்கு முன்னர் ஒப்பந்ததாரரால் நிபந்தனையற்ற பிணையொன்று முன்வைக்கப்பட்டால் நிறுத்தி வைத்தல் பணம் விடுவிக்கப்படலாம் என ஒப்பந்த உடன்படிக்கையின் 14.8 ஆம் பிரிவின் மூலம் இணங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க கம்பனியின் அலுவலக தொகுதி கட்டிடத்திற்குரிய ரூபா 6,681,418 நிறுத்தி வைத்தல் பணம் முழுவதும் நிறுத்தி வைத்தல் பிணையொன்றின் மீது நிறுத்தி வைத்தல் கால எல்லை முடிவடைவதற்கு முன்னர் விடுவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இப் பிணை தொடர்பான விபரங்கள் நிதிக் கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1983 மார்ச் 14 இல் ஆங்கில தட்டெழுத்தாளராக கம்பனிக்கு இணைப்புச் செய்யப்பட்ட தனிநபரொருவரால் மோசடியான கல்விச் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட்டமை தொடர்பாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எவ்வித புலனாய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது 09 வாகனங்கள் விபத்திற்குள்ளாகியிருந்த போதிலும் காப்புறுதி நட்டஈட்டை கோருவதில் தாமதங்கள் ஏற்பட்டிருந்தது. இதனால் ரூபா 521,300 தொகையான உரிய நட்டஈடு 2017 திசெம்பர் 31 வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் செய்திப் பிரிவின் மூன்று உத்தியோகத்தர்கள் 2016 பெப்ரவரி 04 இல் நியூ யோர்க்கில் நடைபெற்ற சுதந்திர தின விழாவிற்கு சமூகமளித்திருந்தனர். அவர்களின் விமானப் பிரயாணச்சீட்டுக் கட்டணங்களிற்காக ரூபா 243,000 தொகையை கம்பனி செலவிட்டிருந்ததுடன் ஊடக மேவுகையை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டமொன்றின் ஒளிபரப்பிற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட அனுசரணையொன்றின் மூலம் அத் தொகையை தீர்ப்பனவு செய்வதற்கு பிரதிப் பொது முகாமையாளர் (செய்திகள்) அறிவித்திருந்தார். எவ்வாறாயினும் அத் தொகை 2017 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது 10 உள்ளூர் தொலைக்காட்சி நாடகங்களிலிருந்து ரூபா 315,336,014 இலாபம் உழைக்கப்பட்டிருந்ததுடன் 20 தொலைக்காட்சி நாடகங்களிலிருந்து ரூபா 100,363,367 நட்டம் ஏற்பட்டிருந்தது. இவ் இலாபத்தில் ரூபா 214,972,647 தொகை அல்லது 84 சதவீதம் கம்பனியால் தயாரிக்கப்பட்ட இரண்டு நாடகங்களிலிருந்து உழைக்கப்பட்டிருந்தது. ஒளிபரப்புவதற்கு பொருத்தமற்றதாக தணிக்கைச் சபையின் குறித்த சில உறுப்பினர்களால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் ஒளிபரப்புவதற்காக அந் நாடகங்களை தெரிவு செய்தல், தணிக்கைச் சபையால் அந் நாடகங்கள் முன்னரே காட்சிப்படுத்திப் பாாக்கப்படாதமை, தணிக்கைச் சபையால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் நாடகங்களை ஒளிபரப்புவதில் வருமானம் குறைவடைதல், அந் நாடகங்களை ஒளிபரப்புவதற்கு பொருத்தமாகவுள்ளதால் தணிக்கைச் சபையொன்றிடமிருந்து பரிந்துரைகளை பெற்றுக்கொள்ளுகின்ற போதிலும் இன்னொரு தணிக்கை சபையால் அவை ஒளிபரப்புவதற்கு பொருத்தமற்றதாக பரிந்துரை செய்யப்பட்டமை, கம்பனியின் தயாரிப்பாளர்களால் மாத்திரமே நாடகங்களை ஒளிபரப்புவதற்குப் பொருத்தமானதாக பரிந்துரைகள் மேற்கொள்ளப்படுதல், தணிக்கைச் சபையால் நாடகமொன்றின் 75 அத்தியாயங்களில் 15 அத்தியாயங்களை மாத்திரம் காட்சிப்படுத்துதல் போன்ற விடயங்கள் நட்டத்திற்கு பங்களித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) நன்கொடையொன்றாக ஜப்பானிலிருந்து பெறப்பட்ட தொலைக்காட்சி நாடகமொன்றின் டப்பிங் உள்ளடங்கலாக செலவினங்களிற்காக ரூபா 2,160,600 தொகை செலவிடப்பட்ட பின்னர் அதன் ஒளிபரப்பு 2017 மார்ச் மாதத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் ஒளிபரப்பிலிருந்து வருமானமாக ரூபா 659,998 தொகை மாத்திரமே பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2017 திசெம்பர் 31 வரை மேற்படி நாடகத்தை ஒளிபரப்புவதிலிருந்து ரூபா 1,500,602 நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது கம்பனியின் மீண்டெழும் செலவினங்களிற்காக ரூபா 284,938,932 தொகையான குறுங்கால நிலையான வைப்புக்களை வட்டியுடன் சேர்த்து கம்பனி காசாக்கியிருந்ததுடன் புதிய முதலீடு எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.4 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தெனியாய பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்ட நீர் மின்நிலையத்திற்காக 2015 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,588,500 பெறுமதியான மின்வலு வழங்கல் றாக்கையானது (Power Distribution Rack) திட்டங்களை மாற்றியதன் காரணமாக இது தேவைப்படவில்லையென குறிப்பிட்டு 2017 திசெம்பர் 31 வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கம்பனியின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் மேற்கொள்ளப்பட்ட உள்ளக கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் பிரகாரம் கம்பனியின் பிரதான களஞ்சியத்தில் கிடைக்கக்கூடியதாகவுள்ள பயன்படுத்தப்படாத மற்றும் மெதுவாக அசையும் மின்சாரப் பொருட்கள் மற்றும் உதிரிப் பாகங்கள் என்பவற்றின் இருப்பு பெறுமதி ரூபா 8,828,892 தொகையாகும். எவ்வாறாயினும் நிதி நிலைமைக் கூற்றில் மெதுவாக அசையும் இருப்புக்களாக ரூபா 7,130,390 தொகை மாத்திரமே இனங்காணப்பட்டிருந்ததுடன் அவ் இருப்புக்களை பதிவளிப்பதற்காக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இருப்பு மீதியில் ரூபா 1,698,502 பெறுமதியான பயன்படுத்தப்படாத மற்றும் மெதுவாக அசையும் இருப்புக்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

### 4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,037,763 தொகையான 12 ஆங்கில திரைப்படங்கள் மற்றும் 2015 ஆம் ஆண்டின் போது கம்பனியால் தயாரிக்கப்பட்ட ரூபா 1,184,575 பெறுமதியான தொலைக்காட்சி நாடகமொன்று என்பவற்றின் பெறுமதி உள்ளடங்கலாக ரூபா 2,222,338 கூட்டுமொத்தமான தொகைகள் அருவச் சொத்துக்களாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக தொடர்ந்துவரும் காலப்பகுதிக்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவொன்றாக கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. மேலும் மேற்படி ஆங்கில திரைப்படங்களில் 04 மீளாய்வாண்டின் இறுதியளவில் ஒரு முறையில் ஒளிபரப்பப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் மேற்படி அனைத்து திரைப்படங்களினதும் ஒளிபரப்புக் காலப்பகுதி 2017 திசெம்பர் 31 அளவில் காலாவதியாகியிருந்தன. அதற்கிணங்க, மேற்படி காலாவதியான ஆங்கில திரைப்படங்களின் ரூபா 1,037,763 பெறுமதியான காலக்கழிவு முடிவடைந்திருக்க வேண்டிய போதிலும் மொத்த தொகை எதிர்கால கொடுப்பனவுகளாக மேலும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) கம்பனியின் முன்னாள் கணக்காளரால் 2011 ஆம் ஆண்டின் போது மோசடி செய்யப்பட்ட பணத்தில் மேலும் பெறவேண்டிய தொகை ரூபா 1,210,620 ஆனதுடன் இது தொடர்பாக எடுக்கப்பட்ட நீதிமன்ற நடவடிக்கைகளின் போது அதற்காக பிடியாணை வழங்கப்பட்டிருந்த போதிலும் இதனை வழங்குவதற்கு அவருடைய முகவரியை கண்டறிய முடியாதிருந்தது. அவ் மொத்தத் தொகைக்கும் நட்டக்கழிவுச் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 4.6 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் விற்பனை நிறைவேற்றுநர் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2016 ஏப்ரல் 25 ஆம் திகதிய 02/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைக்கிணங்க எம்எம் 1–1 சம்பளக் குறியீடு பிரயோகிக்கப்பட வேண்டுமென 2017 யூலை 06 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் 2017 யூலை 06 இலிருந்து செயற்படும் வகையில் விற்பனை நிறைவேற்றுநர் பதவி அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் 2017 சனவரி 01 தொடக்கம் யூலை 06 வரையான காலப்பகுதிக்காக மேற்படி பதவிக்கு உத்தியோகத்தரொருவர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தார். எவ்வாறாயினும் மேற்படி பதவிக்காக ஆட்சேர்ப்புத் திட்டமொன்று 2017 திசெம்பர் 31 வரையிலும் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் பணிப்புரைகளிற்கு முரணாக இப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தரிற்காக ரூபா 150,000 அடிப்படைச் சம்பளம், ரூபா 50,000 விசேட படி, ரூபா 50,000 உபசரைண படிகள், ரூபா 100,000 போக்குவரத்துப் படி மற்றும் ரூபா 4,000 தொலைபேசிப் படி உள்ளடங்கலாக ரூபா 354,000 மாதாந்தப் படி 2017 சனவரி 02 தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதி வரை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இப் பதவி அங்கீகரிக்கப்பட்டதும் 2017 யூலை மாதத்திலிருந்து ஆட்சேர்ப்புச் செய்யப்பட வேண்டிய உத்தியோகத்தரிற்கு செலுத்தப்பட வேண்டிய மாதாந்த சம்பளம் ரூபா 48,568 மாத்திரமே ஆகும் என்பதுடன் ரூபா 354,000 கொடுப்பனவு மாதாந்தம் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக உரிய உத்தியோகத்தரிற்கு ரூபா 305,432 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(iii) 2015 மே 25 ஆம் திகதிய பிஈடி 1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்தியின் பிரகாரம் உத்தியோகபூர்வ மற்றும் தனிப்பட்ட பயன்பாட்டிற்காக உத்தியோகபூர்வ வாகனமொன்று அல்லது மாதாந்த போக்குவரத்துப் படி செலுத்தப்பட முடியும் என முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2006 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட எம்எஸ்டி 30 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் எச்எம் 1-1 வகை அல்லது உயர் மட்டப் பதவியிலுள்ள உத்தியோகத்தர்களிற்கு மாத்திரமாகும். எவ்வாறாயினும் எம்எம் 1-1 சம்பளக் குறியீட்டில் இருக்க வேண்டிய இவ் உத்தியோகத்தரிற்கு மாதாந்தம் ரூபா 100,000 வீதம் போக்குவரத்துப் படி வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) 2005 யூன் 16 ஆம் திகதிய அமப/05/விவிட (026) ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், மதியுரையாளர்களை நியமனம் செய்வதற்காக விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் போது சுயவிபரத் தரவுகள், அவர்களிற்கு ஒதுக்கப்பட வேண்டிய எதிர்பார்க்கப்பட்ட கடமைகள் மற்றும் பணிப்பொறுப்புக்கள் மற்றும் காலப்பகுதி என்பவற்றை உள்ளடக்கிய விஞ்ஞாபனத்தை சமர்ப்பிப்பதன் மூலம் அமைச்சரவை உப குழுவின் பரிந்துரையுடன் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட வேண்டும். எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் போது அமைச்சரவை மற்றும் திறைசேரி அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் 05 மதியுரையாளர்கள் கம்பனியில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 4,518,333 கூட்டுமொத்த தொகைகள் மாதாந்த படிகளாக செலுத்தப்பட்டிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டில் போக்குவரத்து மற்றும் எரிபொருள் படிகளாக ரூபா 1,823,085 கூட்டுமொத்த தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) மதியுரையாளரொருவரிற்கு கம்பனியால் வழங்கப்பட்ட வியாபார அடையாளமுடைய அப்பிள் தொலைபேசி மற்றும் தொலைக்காட்சி 2016 ஆம் ஆண்டில் அவர் வேலையை விட்டுச் சென்ற நேரத்தில் மீளப் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் அவ் உத்தியோகத்தரின் தனிப்பட்ட தொலைபேசி பட்டியல்களை தீர்ப்பனவு செய்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட எல்லையை விஞ்சி செலுத்தப்பட்ட ரூபா 77,669 தொகை உத்தியோகத்தரிடமிருந்தோ அல்லது பொறுப்புடைய தரப்பினர்களிடமிருந்தோ அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரின் பதவி காணப்படாத போதிலும் 2016 யூலை மாதம் தொடக்கம் 2017 ஆம் ஆண்டின் இறுதி வரை பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் பதவிக்கு உத்தியோகத்தரொருவர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 90,000 மாதாந்த படிகள், ரூபா 30,000 ஏனைய படிகள், ரூபா 7,800 வாழ்க்கைச் செலவுப் படிகள் மற்றும் ரூபா 15,000 உபசரணைப் படிகள் உள்ளடங்கலாக ரூபா 2,210,400 கூட்டுமொத்தத் தொகைகள் 2017 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. மேலும் 2017 ஆம் ஆண்டின் போது அவ் உத்தியோகத்தரிற்கு ஜீப் ஒன்றை கம்பனி

ஒதுக்கியிருந்ததுடன் மாதமொன்றிற்கு 405 லீற்றர் எரிபொருள் அவ் வாகனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

(உ) கம்பனியின் அமைப்பு அகவிதியுடன் இணங்காமல் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்பட்டிராத செயற்பாட்டுப் பணிப்பாளர் பதவியொன்றிற்காக 2017 யூன் 21 இலிருந்து உத்தியோகத்தரொருவரை நியமித்திருந்தார். மேலும், அத் திகதியிலிருந்து செயற்படும் வகையில் பணிப்பாளர் சபையின் உறுப்பினரொருவராக அவ் உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்தார். பின்வரும் விடயங்களும் அவதானிக்கப்பட்டன.

(i) 2015 மே 25 ஆம் திகதிய பிஈடி 1/2015, 2015 மே 25 ஆம் திகதிய பிஈடி 2/2015 மற்றும் 2015 யூன் 17 ஆம் திகதிய பிஈடி 3/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைகளிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் போக்குவரத்து வசதிகளாக ரூபா 75,000 மாதாந்தப் படி (பிஈடி 3/2015), சாரதியுடன் உத்தியோகபூர்வ வாகனம் மற்றும் 150 லீற்றர் எரிபொருள் அல்லது உத்தியோகபூர்வ வாகனத்திற்குப் பதிலாக ரூபா 50,000 படி மற்றும் தொடர்பாடல் வசதிகளிற்காக ஆகக்கூடியது ரூபா 5,000 என்பனவற்றை அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருள் முறையான நியமனமொன்றை பெற்றிருந்த செயற்பாட்டுப் பணிப்பாளரொருவரிற்கு செலுத்த முடியும். ரூபா 75,000 மாதாந்த சம்பளம், ரூபா 5,000 தொடர்பாடல் படி, ரூபா 15,000 உபசரணைப் படி உள்ளடங்கலாக ரூபா 457,500 கூட்டுமொத்த தொகை 2017 யூன் 28 தொடக்கம் திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்காக செயற்பாட்டுப் பணிப்பாளரிற்கு செலுத்தப்பட்டிருந்தது. மேலும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் உபசரணைப் படிக் கொடுப்பனவிற்கான அதிகாரம் காணப்படாதமை அவதானிக்கப்பட்டது. 1,109 லீற்றர் எரிபொருள் 2017 யூலை தொடக்கம் நவம்பர் 30 வரை பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ii) செயற்பாட்டுப் பணிப்பாளர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினராக நியமனங்களைப் பெற்ற மேற்குறிப்பிட்ட உத்தியோகத்தர் அதே திகதியில் பிரதிப் பொது முகாமையாளர் (நிகழ்ச்சித்திட்டங்கள்) பதவியில் பதிற்கடமைக்காக நியமனம் செய்யப்பட்டிருந்தார். உத்தியோகத்தரொருவரின் உண்மையான பதவிக்குச் சமமான அல்லது அதனை விட உயர்ந்த பதவியொன்றிற்கு பதிற்கடமை நியமனம் வழங்கப்பட வேண்டிய போதிலும் பணிப்பாளர் சபையின் உறுப்பினரொருவராக செயற்பட்ட செயற்பாட்டுப் பணிப்பாளர் பிரதிப் பொது முகாமையாளர் (நிகழ்ச்சித்திட்டங்கள்) பதவியில் பதிற்கடமைக்காக நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக படிகளும் செலுத்தப்பட்டிருந்தன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவை 2018 ஏப்ரல் 04 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 சந்தைப் பங்கு (Market Share)

பார்வையாளர்கள் தொலைக்காட்சியை பார்வையிடுதல் மற்றும் வானொலியை செவிமடுத்தல் தொடர்பில் ''லங்கா சந்தை ஆராய்ச்சி பணியகம்'' (Lanka Market Research Bureau - LMRB) இனால் 15 தொலைக்காட்சி அலைவரிசைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பிரகாரம் 2017 சனவரி மாதத்தின் போது 7.5 சதவீதமாகக் காணப்பட்ட காணப்பட்ட சந்தைப்பங்கு மீளாய்வாண்டின் திசெம்பர் மாதமளவில் 5.9 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | பெறவேண்டிய கணக்குகள் | (i) | மதிப்பிழந்த காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாண ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | | (ii) | சேவைநாடும் கடன்பட்டோர்களின் அறவீட்டிலுள்ள தாமதங்கள். |
| | | (iii) | கடன் கால எல்லையை விஞ்சி வாடிக்கையாளர்களிற்கு கடன் வழங்குதல். |
| | | (iv) | மீள் விற்பனை கொடுக்கல்வாங்கல்களிற்காக இணங்கப்பட்ட சேவைகளை பெறத் தவறியமை. |
| (ஆ) | செயற்பாடுகள் மீதான கட்டுப்பாடு | (i) | சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு முரணாக படிகளை கொடுப்பனவு செய்தல். |
| | | (ii) | சந்தைப் பங்கை மேம்படுத்தி பாதுகாப்பதற்காக போதியளவு நடவடிக்கைகள் எடுக்கப்படாமை. |
| (இ) | பதவியணியினர் நிர்வாகம் | | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களிற்கு முரணாக அங்கீகரிக்கப்படாத முகாமைத்துவ மட்ட பதவிகளிற்காக நியமனங்களை மேற்கொள்ளுதல் மற்றும் படிகளை கொடுப்பனவு செய்தல். |